# திருமயிலைப் பேயாழ்வார் திருமஞ்சனக் கட்டியம்.



திருமயிலை பேயாழ்வார்

தேவ! விஜயீபவ!

உத்யத்பாநுஸஹஸ்ரபாஸ்வரதநும் ஶுப்ரோர்த்வபுண்ட்ரோஜ்வலம்
கௌசேயாம்பர சோபிநம் ஸுருசிரஸ்வச்சோபவீதாந்விதம்.
முக்தஸ்மேரமுகம் தயாஞ்சிதத்ருசம் பத்தாஞ்ஜலிம் பாஸ்வரம்
ஸ்ரீமந்தம் மஹதாக்யஸூரிமாநகம் ஸம்ஸேவிஷீயாநிசம்.

1. நல்லார் நவில்கின்ற நன்மயிலை மாநகரில்
   நலமாக நாமுய்ய வந்த பெருமாள்!

2. நன்னாரணன்நீங்க மற்றொரு முற்றதுணை
   அன்றே நமக்கென் றுரைத்த பெருமாள்!

3. கல்லாத வாதிகளு மல்லாத மாயிகளும்
   நில்லாது நீக்கியருள் நல்ல பெருமாள்!

4. கலைவலவர் பலர்வாழும் மயிலையெனு மாநகரம்
   தழைத்தோங்கக் காதலித்து வந்துதித்த நற்பெருமாள்!

5\. எல்லாரு முய்யவென நல்லான நான்மறையை
சொல்லால் தொகுத் தருளவல்ல பெருமாள்!

6\. ஏரார்ந்த மணிமுடிமேல் சீரார்ந்த துளவணியும்
கேசவனார் புகழ்மாலை யேத்தியுகந்தருள் பெருமாள்!

7\. மல்லாண்ட திண்டோளன் மகிமைசொலும் மழிசையர்கோன்
மதிபெற்று வாழ்ந்திடவே அருள்செய்த மாண்பெருமாள்!

8\. மதிபெற்ற ஞானியர்கள் துதிசொல்லி யனுதினமும்
தொழுதேத்தி யுய்ந்திடவே மயிலைநகர் வந்துதித்தோய்!

9\. என்னாழி வண்ணன்பால் திருக்கண்டேன் திருமேனி
நிறங்கண்டே னாழிகண்டே னென்றுரைத்த நாவலவா!

10\. எம்பிரான்றன் கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
வருநரகம் தீர்மருந்து கண்டேனென் றுரைத்த பிரான்!

11\. மாகடலி னீருள்ளான் மனத்துள்ளான் மாமலராள்
தனத்துள்ளா னென்றுரைத்த தனிஞானப் பெருங்கடலே!

12\. மூவுலகு முண்டுமிழ்ந்து நீரேற்று மூவடியால்
தாவடியிட் டளந்தபிரான் தாளிணையே யடைந்துய்ந்தோய்!

13\. திருந்தியசீர்ச் செங்கண்மால் திருக்குணமே தாரகமாய்
மருந்துமது பொருளுமது அமுதுமது வென்றுரைத்தோய்!

14\. அலர்மேலோன் கால்கழுவக் கங்கைநீர் கான்றகழல்
தொழநெஞ்சே வாவென்று துணைதேடி நின்றபிரான்!

15\. மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டறையுந் தண்டுளபக்
கண்ணனையே காணவெண்ணிக் காதலித்த கற்பகமே!

16\. கருமா முகில்வண்ணன் கார்க்கடல் நீர்வண்ணன்
திருமா மணிவண்ணன் தேசுரைத்த தேசுடையோய்!

17\. நால்வேதத் துள்ளானே பாற்கடல் நீருள்ளானே
பாம்பணையின் மேலானே யென்றென்று போற்றிடுவோய்!

18\. ஆகாய மூடறுத்து அண்டம்போய் நீண்டவொரு
மாகாயப் பெருமானை மதித்திறைஞ்சும் மாண்புடையோய்!

19\. வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதமே பணிந்துய்ந்த பரஞ்சோதீ!

20\. அனந்த னணைக்கிடக்கும்மால் அடியேன் மனந்தனணைக்
கிடக்குமிது காணீரென் றுகந்துரைத்த வுத்தமனே!

21. ஒருவல்லித் தாமரையா ளொன்றியசீர் மார்பனுறை
திருவல்லிக் கேணிசென்று தொழுதுகந்த தூமனத்தோய்!

22. எந்தை பெருமான்த னிணையடிக்கே யாளாகி
மறவாது வாழ்த்தியிடும் மாண்புடைய பெருமானே!

23. வாமனனாய் மாவலிபால் மூவடிமண் ணிரந்தளந்த
நெடுமால்த னிணையடிக்கே யேழ்பிறப்பு மாளானோய்!

24. தெருளாத பிள்ளையா யாலிலைமேல் சேர்குழவி
யருளாலே யிருளற்ற நெஞ்சுடைய நின்மலனே!

25. என்தன் திருமாலே செங்கணெடி யானே
எங்கள் பெருமானே யென்றுருகு மெழில்மனத்தோய்!

26. தேசுடைய சக்கரத்தாய் சங்கினாய் சார்ங்கத்தாய்
வாசமலர்த் துழாய்மாலை முடியாயென் றுகந்துரைத்தோய்!

27. சுடராழி யொன்றுடையான் சூழ்கழலே நாளும்
தொடராழி நெஞ்சேயென் றுகந்துரைத்த தூய்மதியோய்!

28. விழுதுண்ட வாயானை மால்விடையேழ் செற்றானை
வானவர்க்கும் சேயானை வணங்கியுய்ந்த பெருமானே!

29. வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
உகந்துறையு மெந்தைகழ லடைந்துய்ந்த வேதியனே!

30. மறைமுடியும் பாற்கடலும் பாடகமு மென்மனமும்
குடந்தையுமே குடிகொண்டா யென்றுரைத்த குணக்கடலே!

31. மந்தரத்தால் மாகடலைக் கடைந்தமுத மந்தரத்தார்க்கு
ஈந்தபிரா னருளாயென் றிரந்தேத்து மெழில்மதியோய்!

32. கனலாழி வெண்சங்கம் கதைசார்ங்கம் வெஞ்சுடர்வாள்
இவையேந்தும் பெருமானை யிறைஞ்சியுய்ந்த பெருமானே!

33. எரிசுடரும் மால்வரையு மெண்டிசையு மண்டத்
திருசுடரு மிறையேயென் றுகந்தேத்து முயர்மதியோய்!

34. விண்ணெடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்
உள்ளுவா ருள்ளத்தே யுளன்கண்டா யென்றுரைத்தோய்!

35. குன்றம் குடையாக ஆகாத்த கோவலனே
குழலூது மணிவண்ணா என்றுரைத்த குணக்கடலே!

36. மதகளிற்றின் மருப்பொசித்து மேதினியை யிடந்தெடுத்த
பேரகலப் பேரார மார்வனையே உகந்துரைப்போய்!

37. பலகதிர்கள் பாரித்த பொன்முடியா னடியிணைக்கே
பூரித்துத் துதிமாலை யிட்டருளும் பூரணனே !

38. துரக வாய்கீண்ட துழாய்முடியாய் நங்கள்
நரகவா யதுகீண்ட நாரணனே யென்றழைப்போய் !

39. மாவா யுரம்பிளந்து மாமருதி னூடுபோய்த்
தேவாசுரம்பொருத தேவனையே துதிசெய்வோய் !

40. மணிநீர்ச் சுனைவளர்ந்த மாமுதலை கோள்விடுத்த
அணிநீல வண்ணத்த னடிபணிந்த அற்புதனே !

41. வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினையென் றுரய்ந்துரைத்த அருள்முகிலே !

42. விரையார் நறுந்துழாய் வீங்கோத மேனி
நிரையார மார்வனையே நினைந்துருகி நின்றோனே !

43. கொங்கணைந்து வண்டறையுந் தண்டுழாய்க் கோமானை
எங்கணைந்து காண்டுமினி யென்றுரைத்த பெருமானே !

44. சிறைசெய்த வாணன்தோள் செற்றான் கழலிணையே
நிறைசெய்து நெஞ்சார நினைந்துகந்த நின்மலனே !

45. உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி
வைத்தவனை நாடி வலைப்படுத்த வள்ளலே !

46. நரகத்து நம்மை நணுகாமல் காப்பவனும்
நாரா யணன்கழலே நாடிநின்ற நாவலவா ?

47. தொட்டபடை யெட்டுந் தோலாத வென்றியா
னட்டபுய கரத்தானை யடைந் துய்ந்த ஆரமுதே !

48. கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே சார்வென்று சதிர்கண்ட கற்பகமே !

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரார் கருமுகிலைக் கண்டுகந்த கலைவலவா !

அல்லன்ன குழலும் அகன்ற முகமும்
வில்லன்ன புருவமும் விசால நயனமும்

எள்ளுப்பூ நாசியும் இணைவள்ளக் காதும்
சொற்ப்ரணவ மொழியும் சிவந்த வதரமும்

வெள்ளென்ன வேட்டியும் விளங்கு மணியஞ்சலியும்
நேரான புண்டரமும் நிறைந்த மணிவடமும்

கதித்த துடையும் கணை முழந் தாளும்
பல்லவப் பவழத்தைப் பழித்த விரலடியுமாய்

தேவரீர் திருமஞ்சனங் கண்டருள வீற்றிருக்கு மிவ்வழகு
ஏதேனும் ஜகன்மோஹனமோ? ஸ்ரீவைஷ்ணவ ஸர்வஸ்வமோ?

வேள்வியின் பயனோ? வேதாந்த விழுப்பொருளோ?

நாங்களீ தேதென்று மறியா விவ்வழகுடன் ஊழிதொறு
மூழிதொறும் வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே முநிஸார்வ பௌமனே!

1. கலங்காப் பெருநகரம் காட்டுவான் கழலிணையே
நாடோறும் துதித்திறைஞ்சி நின்ற களைதானோ?

2. சென்று குறளுருவாய் முன்னிலம் கைக்கொண்ட
முதல்வனையே முப்போதும் மொழிந்துநின்ற களைதானோ?

3. திருமா மணிவண்ணன் செங்கண்மா லெங்கள்
பெருமா னடியிணையே துதித்துநின்ற களைதானோ?

4. கற்றுக் குணிலை விளங்கனிக்குக் கொண்டெறிந்தான்
வெற்றிப் புகழ்களையே மொழிந்துநின்ற களைதானோ?

தேவரீர் மஞ்சன மாடிய ருள்வதே.

ஸ்நாநீயம் கநஸார குங்கும லவங்கைலாதிபிர் வாஸிதம்
ஸௌவர்ணேஷு கடேஷு சுத்தஸலிலம் பூர்ணம் புரஸ் திஷ்டதி
கௌசேயஞ்ச சரச்சசாங்கதவளம் ஸித்தாவயம் கிங்கரா:
காருண்யம் கருணாநிதிர் விதநுதாம் ஸ்ரீமாந் மஹாந் யோகிராட்.

அருளப்பாடு சங்கதாரை பத்மதாரை ஸஹஸ்ரதாரை

உபயவேத கீதமங்களவாத்யம்.